

# இல்லாதவன் பிள்ளை!

A STORY WRITTEN BY

கேசவன் முத்துவேல்

# இல்லாதவன் பிள்ளை!

*கதை சுருக்கம்: பிள்ளைப்பேறு தள்ளி போன தம்பதியின் மருத்துவ சிகிச்சையில் ஏற்பட்ட குழப்பம். அதற்கு மரபணுக்கள் கொடுத்த விடை. காட்சி,இடம் - அனைத்தும் கற்பனை. வாசகர்கள் தொடரலாம்!*

# 0: இன்று!

ராமன் என்றாலே சந்தேகம் தான் போல. இருப்பு கொள்ளவில்லை! நிம்மதியாக இருக்கமுடியவில்லை ராமனால். ராஜுவுக்கு பால் ஊட்டிக்கொண்டிருந்தாள் சுமிதா. நேற்று வரை இந்த பிள்ளை தன் பிள்ளை. மொபைலில் வந்த அந்த மருத்துவ அறிக்கை புயல் போல் நெஞ்சை சிதைத்து கொண்டிருக்கிறது. பிள்ளையின் எச்சில் வடியும் பாலை அவனால் ரசிக்கமுடியவில்லை. குழந்தை அப்படியே உறங்கிப்போனது. சுமிதாவும் கண் அயர்ந்துவிட்டாள்.

மறுநாள் காலை. பரிசோதனை மையம். Dr.பீட்டர் போர்ட்மென் நன்கு அறிமுகமானவர்.

# 1: அன்று: கள்ளச்சிரிப்பு - Houston

இவர்களுக்கு பிள்ளைபேறு தள்ளி போனபோது Dr.பீட்டர் தான் மருத்துவ ஆலோசனை வழங்கினார். அவரின் வழிகாட்டுதலின் பேரில் ஹூஸ்டன் Memorial Hermann மருத்துவமனையில் சிகிச்சை மேற்கொண்டனர்.மருத்துவ நகரின் கிரீடமாக அலங்கரித்தது அந்த முப்பத்துமுன்று மாடிக்கட்டிடம். உண்மையில் அந்த கட்டத்தின் உச்சியில் ஒரு பெருங்கிரீடத்தை வடிவமைத்திருந்தார்கள். 21வது மாடியில் இருந்த Dr.மெர்லின் கோமிஷ் OB/GYN சிறப்பு நிபுணர். சுமிதாவை நன்கு பரிசோதித்தார். சில மாத்திரைகள் பரிந்துரைக்கப்பட்டது. மாதக்கணக்கில் எடுத்துக்கொண்டாள். ராமனுக்கு விந்து மாதிரி பரிசோதனை செய்யப்பட்டது. முடிவு எல்லாம் சாதகமாக வந்தாலும் IVF பரிந்துரைக்கப்பட்டது.



சுமிதாவின் சுழற்சி நாட்கள் கணக்கில் கொள்ளப்பட்டது. ஆரோக்கியமான முட்டை உற்பத்திக்கு என சுமிதாவிற்கு இரு ஊசிகளும்,மாத்திரைக்களும் கொடுக்கப்பட்டது. அவளின் 14ம் நாள் அடுத்த சிகிச்சை தொடரப்படும் என்றும் அன்றைய தினம் முட்டை சேகரிக்க சரியான நேரம் என்றும் விளக்கினார். ராமனுக்கும் அன்றே விந்தனு சேகரிக்கப்ப்டும் என்றும் , இருவரும் தயாராக வர அறிவுறுத்தப்பட்டனர். IVF முறையில் ஒன்றுக்கு மேற்ப்பட்ட கரு வளர்வதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளதென்றார். தூரத்து சித்திக்கு அப்படித்தான் ஒரு இரட்டைச்சுட்டிகள். ராமனும் அவளும் சரியென்றனர். இரட்டை மகிழ்ச்சி யார்தான் மறுப்பார்? அம்மா

ஒருமுறை கூறியிருந்தாள், இராமன் கருவில் இருந்தபோது அவள் இரட்டைகருவாக உணர்ந்ததாகவும் , ஆனால் இவன் மட்டுமே தங்கி வந்ததாகவும். தன்னைவிடவும் தன் அம்மா மிகமகிழ்வாள். தேவையான இடத்தில் இருவரும் கையெழுத்து இட்டனர்.

இரவு மேகங்களிடையே நிலவை தேடினாள்; முழு இருள். இன்று புதுநிலவு போல; இன்னும் பதின்நான்கு நாட்கள் ஆகும், முழுநிலவாக! Houstonனுக்கும் நிலவுக்கும் ஒருபிரியா பந்தம். நிலவில் உச்சரிக்கப்பட்ட முதல் சொல் "Houston"தானாம் - NASA சென்ற போது அறிந்தவை. அடுத்த இருவாரங்கள் காத்திருப்பு - அவளுக்கும், நிலவுக்கும்!

புதன்கிழமை மதியம் ராமனும் அவளும் மீண்டும் Memorial Hermann விரைந்தனர். ஆறு மையில் தூரம் என்றாலும் அவளுக்கு மிக நீண்ட பயணமாக இருந்தது. பெருந்தொற்று காரணமாக மருத்துவரை சந்திக்க ஒரு நபர் மட்டுமே அனுமதி. மருத்துவமனையின் விதி மிக கெடுபிடியாக இருந்தது. வெளியே வேறு ஒரு தம்பதி அமர்ந்திருந்தனர். முகத்தை பார்த்தாலே தெரிந்தது. தமிழ் முகம். அவன் நல்ல உயரமாக இருந்தான். இராமன் அவர்களை நோக்கி புன்னகைத்தான். பதிலுக்கும் அவள் கணவன் சிரித்தான். அவளும் சிமிதாவை போல் பதட்டமாக இருந்தாள்.இங்கு நிலவிய இருக்கமான சூழ்நிலையை அவர்கள் புன்னகை சிறிது உடைத்திருந்தது. சிறப்பு மருத்துவர் மெர்லின் அறையில் சுமிதாவிற்கு சில சோதனைகளும் கேள்விகளும் மேற்கொண்டார். சுமிதா மருத்துவமனை உடைக்கு மாறினாள். இது ஒரு சிறு சிகிக்சை தான், ஆனாலும் அவளுக்கு சிறிது மயக்க மருந்து கொடுப்பார்கள் என்றும் விளக்கப்பட்டது.

முன்பே அறிவுறுத்தப்பட்டதனால் நிரம்ப தண்ணீர் குடித்துஇருந்தாள். நீர்ப் பை நிரம்பியிருந்ததாக உணர்ந்தாள். கண்ணாடிக்கு வெளியே இருந்த ராமனை பார்த்தாள். "தண்ணீர் வேண்டுமா?" என்று ஒரு பாட்டிலை நீட்டினான். கடைசி வரை இவன் தன்னை புரிந்துகொள்ளபோவதில்லை என்று விதியை நொந்தாள். அவனும் பாவம் தான்.

Dr.மெர்லினும் குழுவும் வந்தனர். மெர்லினும் Dr.ஜெனிபரும் ஆலோசித்தார்கள். ஜெனிபர் வாட்சன் தான் இங்கு பிரதான Endocrinologist. இருபது வருட அனுபவம் உள்ளவர். சிகிச்சை அறைக்கு மாற்றப்பட்டாள், சுமிதா. ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தாள். ஒரு மெல்லிய வளையக்கூடிய குழாய் அவளுக்குள் செலுத்தப்பட்டது. நீர்ப்பை நிரம்பியிருந்ததால் Ultrasound அலைகள் உறுப்புகளையும் , சூலகம் செல்லும் வழியையும் தெளிவாக திரையில் எதிரொலித்தது.

முட்டை உற்பத்தியை தூண்ட கொடுத்த ஊசி அவள் Hormoneளில் ஆதிக்கம் செலுத்தியது.ஏழெட்டு வளர்ந்த முட்டைகள் தயாராக இருந்தன. தேர்ந்தெடுக்கப்பட்ட சூலகத்திற்கு அருகில் வரை சென்றது அந்த குழாய். தலைமுடி போன்ற நுண்ணிய ஊசி ஒன்று அந்த குழாய் வழியே சூலகம் நோக்கி முன்னேறி பயணத்தது. அந்த நுண்ணிய ஊசி அவளின் நான்கு ஐந்து முட்டைகளை உறிஞ்சிக்கொண்டது. அந்த குழாய் இப்பொழுது அடுத்த சூலகம் நோக்கி சென்றது. ராமன் கைக்கடிகாரம் பார்த்தான். வழக்கத்திற்கும் அதிகமான ரத்த அழுத்தம் காட்டியது. உள்ளே அவளின் கருவுறா முட்டை எடுத்து பாதுகாக்கப்பட்டது. ராமனை வேறு ஒரு அறைக்கு அழைத்து சென்றனர். தேநீர் மேசையின் மேல் இருந்த ஆங்கில மாத இதழ்கள் சிதறிக்கிடந்தன. அட்டைப்பட

நாயகியை எங்கோ பார்த்ததுபோல் இருந்தது அவனுக்கு. விந்து மாதிரி குழாய்களில் எடுக்கப்பட்டது. ராமன் வெளியே வந்த போது, பக்கத்து அறைக்கு வரவேற்பறையில் கண்ட உயரமானவன் உள்ளே சென்றான். தன்னைப்போலவே இவனுக்கும் இன்று சேகரிப்பு போல. இருவரும் புன்னகையை பரிமாறிக்கொண்டனர். இரண்டு மணி நேரத்தில் எல்லாம் முடிந்துஆயிற்று. இனி ஐந்து நாட்கள் கழித்துவர வேண்டியது.

தன்னை தேடியும் யாராவது வருவார்கள் என்று எதிர்பார்த்த எஞ்சிய முட்டைகள், யாரும் வராததால் வழக்கமான பாதையில் பயணிக்க தொடங்கியது. உள்ளே நான்கு சிறிய கண்ணாடி கிண்ணங்களில் சூலகத்து பரிசை வெல்ல ஒரு பெரும் போட்டி நடந்துகொண்டிருந்தது. போட்டி என்பதினும் போர் என்றே சொல்லலாம். யாரும் அறியாவண்ணம் போரில் ஒரு சூழ்ச்சி அரங்கேற தயாரானது. வெற்றியின் கள்ளச்சிரிப்பு யாருக்கும் கேட்கவில்லை. சூழ்ச்சிகள் சூழ் உலகட இது. All are fair in love and war.

விதி ஒரு சதி பிண்ணியது.

# 2: நதியோடு ஒரு நடை - San Antonio!

அருகில் உள்ள சாயிபாபா கோவில் தரிசனம். மூலையில் ஒரு பெரிய அனுமன் ஆசிர்வதித்துக்கொண்டிருந்தான். ராமன் அனுமன் பாதம் வணங்கினான். மறுபுறம் ராமனின் பாதங்களில் அனுமன் வீழ்ந்துகிடந்தான். கண்டும் காணாததென என்றும் போல் சாய்பாபா புன்னகை வீசினார். வெளியே பல்லாக்கு தயாராகி கொண்டிருந்தது. சுமிதா சில இனிப்புகளை பிரசாதமாக பெற்றுக்கொண்டாள். Pearland மீனாட்சி கோவிலில் இருக்கும் துர்க்கைக்கு ஒன்பது வெள்ளி தொடர்ச்சியாக எழுமிச்சை அகல்விளக்கு ஏற்றுவதாக வேண்டிக்கொண்டாள்.

எல்லாம் முடித்து வருகையில் ராமன் கைப்பேசியில் அழைப்பு வந்தது. புதிய தொடர்பு எண். வாகனத்தை ஓட்டியபடியே பதிலளித்தான் ராமன். எதிர்முனையில் உரிமையுடன் ஒரு குரல். "டேய், அண்ணா, இந்த Weekend freeya?". ரவி தான்! WAல் சொல்லியிருந்தான். மறந்துவிட்டது.

ராமனின் பெரியப்பாவின் மகன், ரவிகுமார் அருகிலிருக்கும் San Antonio நகருக்கு தன் மனைவியுடன் ஆறு மாதங்கள் முன்பு வந்திருந்தான். வார இறுதி வந்து தங்குமாறு அழைப்பு விடுத்தனர்.பெருந்தொற்று காரணமாக திருமணம் செல்லவில்லை. நான்கு வயது இளயவனாவனால் தம்பி முறை. மனைவி சுமிதாவும் ரவியும் ஒன்றாக படித்தவர்கள்.

ராமனுக்கும் சரியென்று பட்டது. மருத்துவ வாசம் தள்ளி இருந்தால் நன்றாயிருக்கும் என்று தோன்றியது. கிளம்பும்முன் மூலைமுடுக்கெல்லாம் கரப்பான்பூச்சி மருந்தை இராமனிடம் கொடுத்து தூவச்சொன்னாள். இவர்களைவிடவும் கரப்பான்பூச்சிகள் தான் இந்த குடியிருப்பில் நெடுநாள் வாசம் செய்திருந்தது. மூன்று மணிநேரம் பயணம். நகரின் எல்லையில் ஒரு குடியிருப்பு. சுகிர்த்தா புதுமணப்பெண்! நிறைய சமைத்து வைத்திருந்தாள். சுமிதா தன் அமெரிக்க அனுபவங்களை சுகிர்த்தாவிற்கு பகிர்ந்தாள்.கூடவே ரவியின் கல்லூரி நாள் குறும்புகளை அடுக்கிகொண்டு போனாள்.

சுமிதாவால் தன் திருமணத்திற்கு நண்பர்களை அழைக்க இயலவில்லை. அப்படியும் ரவியை கண்டதில் ஆச்சர்யம். பிறகு தான் தெரியவந்தது , அவன் ராமனின் தம்பி என்பது. அன்று கூட அவளால் நிறைய பேசமுடியவில்லை. இரு வாரங்களில் அவளும் ஹூஸ்டன் வந்து விட்டாள். அவ்வப்போது மின்னஞ்சல்களிலும் குறுஞ்செய்திகளுலும் பேசிக்கொள்வதோடு சரி. நீண்ட நாள் கழித்து இன்று தான் இருவருக்கும் நேரில் பேச நேரம் கிடைத்துள்ளது. ரவியும் சுமிதாவும் கல்லூரி நாட்களை அசை போட்டனர். கல்லூரி நாட்களில் இவர்களின் குழு எல்லா போட்டிகளிலும் ஓங்கியிருக்கும். வேலை தேடி அலைந்த நாட்கள், பின் கிடைத்த இந்த வேலை, நான்கு வருட உழைப்பு, Onsite விசா , நிச்சயம், திருமணம் என அனைத்தும் கதைக்கபட்டது.

இரவு உணவு Pizza order செய்திருந்தார்கள் ; அவர்கள் அரட்டை தொடர்ந்தது. Netflixல் Predestination ஓடிக்கொண்டிருந்தது. ரவியின் தேர்வு.

Sequence மற்றும் Uno சீட்டுக்கள் எடுத்து வந்திருந்தான் இராமன். இந்த விளையாட்டுகள் ரவி-சுகிர்தாவிற்கு புதிது.

ஆனாலும் எளிதில் கற்றுக்கொண்டனர். சுமிதாவும் ரவியும் ஒரு அணியாயினர். சுகிர்த்தாவும் இராமனும் எதிர் அணியாய் திரண்டனர். கல்லூரியில் நின்ற அணியை சுமிதா-ரவி தொடர்ந்தனர்.

கதாநாயகி Jane அழுதுகொண்டிருந்தாள். காதலன் John அவளை தேற்றிக்கொண்டிருந்தான். John, தான் தன் என்று அப்பொது அவளுக்கு தெரியவில்லை. அவர்களுக்கு ஒரு அழகிய பெண் குழந்தை பிறந்தது. Jane என பெயர் சூட்டப்பட்ட அந்த பிஞ்சு பின்னாளில் அதே கதாநாயகியாக வளர்ந்திருந்தது. முன்னுக்கு பின் முரணான இந்த காலப்பயணக் கதையால் ராமனுக்கு தலை சுற்றியது. மீண்டும் ஒருமுறை பார்த்தால் புரியும் என்றான் ரவி.

மூன்று மணி நேரம் ஓட்டிவந்த களைப்போ அல்லது இந்த படமே, அவனுக்கு தலைவலிக்க தொடங்கியது. தூங்கினால் தேவலைபோல. சீட்டுக்களை கீழே வைத்துவிட்டு தூங்கச்சென்றான். தலைக்குள் இரண்டு அசுரர்கள் மாறிமாறி வதைத்து போராடுவது போல் இருந்தது.

இனி UNOதான் ஆட முடியும். சுகிர்தாவிற்கு இது பிடித்துருந்தது. முதல் ஆட்டமே வென்றாள். கல்லூரியில் ரவியின் ரகசியங்களை ஒவ்வொன்றாக போட்டு உடைத்தாள் சுமிதா. நேரம் போவதே தெரியவில்லை. சுகிர்தா அப்படியே Sofaவில் படுத்தாள். காலையில் எழுந்து சமைக்கவேண்டும். ரவி ஒரு தேநீர் விரும்பி. சுமிதாவிடம் கேட்டு ஒரு கோப்பை வாங்கி பருக ஆரம்பித்தான். நள்ளிரவு தாண்டியும் அவர்கள் ஆட்டம் தொடர்ந்தது

காலையில் நகரம் அவளுக்கு அழகாக தெரிந்தது. மாலை வேளையில் நதியின் கரையில் நடப்பது இங்கு பிரதான பொழுதுபோக்கு. நதியோடு நடப்பதை ஒரு சுற்றுலாவாகவே மாற்றியிருந்தனர். காதலர்கள், இளம் தம்பதியினர்கள் , நண்பர்கள் , குழந்தைகள் என நதியின் இரு கரைகளும் மகிழ்ச்சி வழிந்து கொண்டிருந்தது.

சிறிய படகு ஒன்றில் நால்வரும் ஏறினர். மேலும் சில சுற்றுலாவாசிகள் சேர்ந்துகொண்டனர். எதிரில் ஒரு குழந்தை Chocolate தின்றுகொண்டிருந்தது. உதடுகளில் வழிந்து சட்டையில் கறையானது. நதியில் மிதந்தது படகு. கனவுகளில் மிதந்தாள் சுமிதா.

படகு லிலா காக்ரெல் அரங்கம் முன் நின்றது. அந்த திரையரங்கத்தின் சிறப்புகள் விளக்கப்பட்டது. முதலாம் பெண் மேயர் நினைவாக அரங்கத்திற்கு அந்த பெயராம். முகப்பில் இருந்த சுவரோவியம் அவளை கவர்ந்தது. கிரேக்க, ரோம காலத்தையும் Cowboyக்களையும் இணைத்து விண்வெளி பயணம் செய்யும் வண்ணம் அமைந்திருந்த்து. Houstonனின் NASA அவள் நினைவு வந்து சென்றது.




சாவரி முடிந்ததும் கரை மேல் இருந்த உணவுகம் சென்றனர். இரவு மின்விளக்குகளால் ஜொலித்தது.நெடுநாள் கழித்து சுமிதா மிக கலகலப்புடன் இருந்தாள். அவள் முகத்தில் எப்பொழுதும் படர்ந்திருக்கும் அந்த இறுக்கம் இன்று இல்லை. மகிழ்ச்சி மட்டுமே அப்பியிருந்தது.

ஊர்ந்து செல்லும் நச்சுப்பாம்பு போல நதி வளைந்து நெளிந்து ஓடியது. மாலை ஓய்ந்து இருள் ஆதிக்கம் செலுத்த தொடங்கியது.

மறுநாள் அவர்கள் அலமொ சென்றார்கள். மாகாணத்தின் வரலாற்று சிறப்பு மிக்க இடம். Texasன் சுதந்திர வேட்கைதீ கொழுந்துவிட்டு எரிய தொடங்கிய இடம். இங்கிருந்து

தான் மெக்சிகோவிடம் இருந்து பிரிந்தகதை பிறக்கிறது. ஆயிரம் உயிர்களின் பலியை கண்டு மௌன சாட்சியாக அந்த சுவர் நின்றது. “Remember the Alamo!" என்ற நூற்றாண்டு கூக்குரல் இன்னமும் அதில் எதிரொலித்தது. Texas ஒரு மாறுபட்ட மாகாணம். மற்ற மாகாணங்களில் இருந்து பல விஷயங்களில் வேறுபடும். அமெரிக்காவின் அகோர ஆற்றல் பசிக்கு இரையாய் போன மெக்சிகோவின் செல்ல மகள்.

இரண்டு நாட்கள் ஒடேடி விட்டது. இரண்டு இரவுகளும் ஓடியிருந்தது!

தான் நினைத்ததை விதி முடித்திருந்தது.

# 3: Blood is thicker than water

திங்கள் மீண்டும் ஹூஸ்டன்! மாலை மெம்மோரியல் மருத்துவமனை அடைந்தனர்.Dr. மெர்லின் சுமிதாவை உள்ளே அழைத்தார். பிளாஸ்டோசிஸ்ட் நன்றாக ஆரோக்கியமாக இருப்பதாக அறிக்கை தெரிவித்தது. அவளின் முட்டை நல்லமுறையில் கருவுற்றியிருப்பதாகவும், அதை இன்று அவளின் கருப்பையில் பெருத்துவதாகவும் விளக்கினார். இன்னும் சில மணிநேரம் ஆகும் என்றும் பின் வீடு திரும்பலாம் என்றும் கூறினார். ஐந்தாண்டு கால காத்திருப்பின் வலி, இந்த அரைமணியில் காணாமல் போனது.

இன்னும் இரண்டு வாரங்கள் காக்க வேண்டும். அந்த நாளும் வந்தது. இரண்டு கோடுகள் ஒளிர்ந்தன. இரண்டு உள்ளங்கள் மகிழ்ந்தன.

மீண்டும் மெரிலின் அறை. வரும் நாட்கள் கூடுதல் கவனமுடன் இருக்க அறிவுறுத்தினார். கருப்பைக்குள் வெளியே இனைந்த கரு.வளரும் கருவிற்கு போதுமான நோய் எதிர்ப்பு ஆற்றல் இந்த தருணத்தில் இருக்காது என்றார். தன் சொந்த அணுக்களையும் அந்நிய அணுக்களையும் கூட அதனால் அடையாளம் காணா இயலாது. ஒருவேளை ஏதாவது அப்படி ஒரு அந்நிய அணு நெருங்கினால், அது வளரும் கருவிலேயே தங்கி குழந்தையின் வாழ்நாள் அங்கமாகி விடும் சாத்தியம் என்றும் அறிய வந்து வியந்தாள்.

தன்னை காத்துக்கொள்ள கரு எந்த எல்லைக்கும் செல்லும் என்றும் பில்லியன் ஆண்டுகளாக தொடரும் இந்த உயிர்ச்சங்கிலி அவ்வளவு எளிதில்

அறுபடாதென்றார். ஆனாலும் மிகக் கவனமாக இருக்கவேண்டிய தருணம்.

ஆரோக்கியமான காய்கறிகளும் மீன் மற்றும் இறைச்சிகளும் நன்கு எடுத்துக்கொள்ள பரிந்துரைத்தார். கொரொனா காலத்தில் காய்களும் கறிகளும் வீட்டின் கதவுகளை நேராக தட்டின. மஞ்சளையும் உப்பையும் பாத்திரங்கழுவும் சிங்கில் போட்டு காய்களை நீரில் ஊறவைத்தாள், சுமிதா. இப்படி செய்தாலெல்லாம் வைரஸ் போகாதென்றான். மஞ்சள் சிறந்த Antibiotics என்றாள். மஞ்சள் மிகைப்படுத்தப்பட்ட ஒன்று என கிண்டல் செய்தான். அப்படியே வைத்துக்கொண்டாலும் இது, வைரஸ். Antibiotics அதை ஒன்றும் செய்யாதென்றான். சிறுத்தைக்கான வலையில் சில்வண்டு சிக்காதே - இராமன் நக்கலடித்தான் பக்கத்து வீட்டு விமலா Ajax போட்டு ஊறவைத்து கழுவுவதாக கூறினாள். இவனிடம் பதிலில்லை. உப்பும் மஞ்சளும் எவ்வளவோ தேவலை.

சுமிதாவின் இரத்த அறிக்கையில் அவளுக்கு சோகை இருப்பது தெரிய வந்தது. கூடுதல் கவனம் தேவைப்படும் நேரம் இது. சிவப்பணுக்களை அதிகரிக்க சில இரும்பு மாத்திரை கொடுக்கப்பட்டது.

மாதங்கள் உருண்டது. பெருந்தொற்று காரணமாக சுமிதாவின் அம்மாவுக்கு விசா கிடைக்கவில்லை.இவர்களின் குடியிருப்பு இந்திய மக்களால் நிரம்பியிருந்தனர்.அது 2020 ஜனவரி மாதம்; குடியிருப்பு நண்பர்கள் சேர்ந்து சுமித்தாவிற்கு சூற்காப்பு நடத்த திட்டமிட்டனர்; மல்லிகை சாரம் அவளுக்கு கொள்ளை பிரியம்; ராமன் ஒருமுறை NewYorkக்கில் இருந்து ஆர்டர் செய்திருந்தான். அவ்வளவு தூரம் மெனக்கெட தேவையில்லை என்றும் அருகில் உள்ள Katy நகரில் தேவையான அளவு எல்லா வகை மலர்களும்

கிடைக்கும் என்று தெரியவந்தது; மறுவாரம் பொங்கல் பண்டிகை வேறு! இங்கு கொண்டாட்டத்திற்கு பஞ்சமிருக்காது.



அருகிலேயே பிரியாணி கடைகளும் இருந்தது இன்னும் வசதியாக அமைந்தது. சுமிதாவின் நெருங்கிய தோழிகள் இழுத்துபோட்டு அனைத்து வேளைகளையும் பகிர்ந்துகொண்டனர்.நினைத்ததைவிடவும் சிறப்பாக நடந்து முடிந்தது அவள் சூற்காப்பு விழா. பெருந்தொற்றையும் தாண்டி உதவும் உள்ளங்களும் உறவாடும் நட்புகளும் கடினமான நாட்களை எளிதாக கடக்க உதவின. "Texas" என்றால் மெக்சிகோ பழங்குடி மொழியில் தோழர்கள் என்று அர்த்தம்! அந்த வாக்கை இந்த மக்கள் நிரூபித்தனர். நாட்களை எண்ண தொடங்கிவிட்டாள் சுமிதா.

எட்டாம் மாதப் பரிசோதனையில் குழந்தை நன்றாக வளர்திருப்பதாகவும், சராசரிக்கும் அதிகமான எடை இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. தினமும் சிறுசிறு உடற்பயிற்சி மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டாள். இரத்ததில் சர்க்கரை அளவை கண்காணிக்கவும் மறுமுறை வரும்போது அளவுகளை கொண்டுவரவும் ராமனுக்கு சொல்லப்பட்டது.

மறுநாள் காலை படுக்கையிலேயே அவள் தன் அடிவயிற்றில் வலியை உணர்ந்தாள். எழுந்து சென்று போது பார்த்தபோது சிறிய இரத்தக்கசிவை கண்டு பயந்துவிட்டாள்.

சுமிதாவின் இரத்தம் O - வகை. பேறுகால நேரத்தில் சில சிக்கல் வரலாம் என Dr. மெர்லின் எச்சரிக்கை கொடுத்தார். இரத்தசோகை அவளுக்கு சில எதிர்பாரா சிக்கல்களை கொண்டுவரலாம் என விழிப்பூட்டினார். O - ஒரு Universal donar வகை. எல்லோருக்கும் கொடுக்காலாம் , ஆனால் தேவைப்படும் நேரம் அந்த வகை ரத்தம் மட்டுமே ஏற்கப்படும்.ராமனின் ரத்தவகை "A+" ; அவனால் மனைவிக்கு தானம் வழங்க முடியாது;அவனுடைய சில பிறந்தநாட்களில் சென்னை ராஜிவ் காந்தி மருத்துவமனையில் குருதி கொடையளித்திருந்தான். பணியிடத்தில் கூட அவன் கொடுத்திருந்தான்.

இங்கு இரத்தக்கொடை அவ்வளவு எளிதல்ல.மாகான மருத்துவ சட்டம் வேறு பல நிபந்தனை விதித்துள்ளது; குறைந்தபட்சம் 5 வருடங்கள் தொடர்ந்து நாட்டின் உள்ளேயே இருந்திருக்கவேண்டும் என்பது முதன்மையானது.நிர்வாகம் தன்னிடம் இருப்பு போதுமான அளவு இருப்பதாக சொன்னதும் அவனுக்கு நிம்மதியாக இருந்தது. நேரம் வரும் பொழுது தானும் இரத்ததானம் கொடுக்க மனதினுள் உறுதி பூண்டான்.

அவள் வேறுவகை தான். ஆனாலும் தன் இரத்தம் தாங்கி பேணுகிறாள். தன்னுடைய இரத்தம் வளர்ந்து வந்து நிற்கிறது. அவனுடைய இரத்தம் தான். ஆனால் அது அவனுடைய இரத்தம் தானா?

விதியின் சூட்சமச்சிரிப்பு அவன் காதுகளில் விழவில்லை.

# 4: பனியில் பூத்த மலர்

மாதத்தின் இறுதியில் நாள் குறிக்கப்பட்டு இருந்தது; மறுநாள் Dr. மெர்லினுடன் ஒரு சோதனை இருந்தது. எல்லாம் நன்றாக இருப்பதாகவும் பனிக்குடம் மூன்று நாள் முன்கூட்டியே உடைய வாய்ப்பு இருப்பதாகவும் சொன்னார்.

நாட்கள் விரைந்து ஓடின.குறித்த நாள் வந்தது. மருத்துவமனை அனுமதிக்கப்பட்டாள். பிரசவவலி தூண்ட ஒரு ஊசி செலுத்தப்பட்டது.வலியில் துடித்தாள். செவிலி வந்து அவளை Push, push என்று சொல்லி ஆதரவாக கரம் கொடுத்தாள். மெர்லின் வேறு ஒரு அறையில் இருந்தார். தகவல் அனுப்பட்டது. இரண்டு மணி நேரம் யுகம் யுகமாக கடந்தது.

மெர்லின் ஒரு சிறு கத்தியை எடுத்து எதிர்பார நேரம் கண்ணிமைக்கும் நேரத்தில் கீரினார். சுமிதா உச்சகட்ட வலியில் அழுது துடித்தாள். மெர்லின் அவளை சட்டை செய்யவில்லை. குழந்தை எளிதாக வெளியே வந்தது. உலகம் இராஜுவை வரவேற்றது. மெர்லின் ஒரு கத்திரியை கொடுத்து கொடியை வெட்டச்சொன்னார். ராமனின் கைகள் நடுங்கின. தாயையும் சேயையும் இணைத்திருந்த கொடி உறவை பிரித்தான்.



*"Club Earth is only for those lucky VVIPs who completed their long race fighthing against the millions"*. NetFlixல் பார்த்த *The great sperm race* ல் Julian Jonesன் வரிகள் அவன் நினைவுக்கு வந்தது. வெற்றியாளன் இப்பொழுது தன் கைகளில். கைகள் அவனியும் மீறி நடுங்கியது. புகைப்பட கலைஞர் ஒருவர் தாய்சேய் முதல் அணைப்பு, முதல் முத்தம் அனைத்தையும் நினைவுகளாக பதிவு செய்தார். வெட்டும் கைகளின் நடுக்கத்தையும் அது பதிவு செய்தது. வெட்டும் கைகளின் நடுக்கத்தையும் அது பதிவு செய்தது. அவர்களே ஒரு சிறு தொகைக்கு குறும்படமாகவும் கொடுப்பார்கள்

தன்னுடைய வாரிசு. தனக்காவே இந்த உலகில் பிறந்த ஒரு உயிர். இந்த நொடியில் இந்த உலகையே அவன் கைகளில் அள்ளி கொடுக்கவேண்டும் போல் இருந்தது.

தொப்புள் கொடி மற்றும் சூல்வித்தகம் (நஞ்சுக்கொடி) மருத்துவமனைக்கு கொடையளிப்பதாக முன்னமே உறுதியளித்திருந்தான். கொடியின் திரவம் தேவை படுவோர்க்கு உயிர்காக்கும் அதிமருந்து என்பதை உணர்ந்தான். மண்ணில் வீணாக போகும் இந்த திரவம் மனதகுலத்திற்கு உதவ நினைத்தான். ஒரு உயரமான

பெண் நன்றியுடன் Cord Blood Donationஐ பெற்றுக்கொண்டாள். செவிலி பருத்தித்துணியில் குழந்தையை துடைத்து, உலர்த்தி வாயில் விழுங்கிய கசிவுகளை நீக்கிகொண்டிருந்தார். எடையும் உயரமும் அளக்கப்பட்டது. பாதங்களின் அச்சு சான்றிதழில் எடுக்கப்பட்டது.

சுமிதாவிற்கு இரத்த இழப்பு எதிர்ப்பார்த்ததைவிடவும் அதிகமாக இருந்தது. இரத்தசோகை மேலும் அவள் நிலையை மோசமாக்கியது.மெர்லின் PPH(Postpartum Haemorrhage)ஐ எதிர்கொள்ள ஆயுத்தமனார். குறைந்தபட்சம் ஒரு யூனிட் O- தேவை. நிர்வாகத்திடம் தயராக இருந்தது. Dr. மெர்லின் மற்றும் அவர் குழு நன்றாக கவனித்துக்கொண்டது.

அவர்கள் குடியிருப்பு நட்புகள் சமையலிலிருந்து தேவையான அனைத்தும் உதவி புரிந்தனர். அம்மா முன்னமே போனில் கூறியிருந்தாள். பிறந்த மண்ணை ஒரு பிடி எடுத்துவைத்து இடுப்புக்கொடி செய்யச்சொல்லி. மாலை வேளை கீழே பதியம் போட்ட மலர்ச்செடிகளிடையே சிறிது மண்ணை அள்ளிக்கொண்டான். செவிலி தானே குழந்தையை கொண்டு வந்து காரில் பொருத்தினாள். வரும் வழி நல்ல மழை. விமலாதான் ஆரத்தி எடுத்தாள். குழந்தையை கையில் வாங்கி கொஞ்சினாள். தாயை போல் பிள்ளை இருப்பதாக கூறினாள் விமலா. "ஏன்? என் இல்லையா?" என்றான் இராமன். "வளர்ந்த பின் தெரியுமோ என்னமோ" என்றாள்!

உலகம் காதலர்தினத்திற்கு தயாராகி கொண்டிருந்த போது மாகணம் பெரும் பனிப்புயலை எதிர்கொண்டிருந்த்து. இளம்பிஞ்சு ராஜுக்கு இரண்டு வாரங்கள் கூட ஆகவில்லை. சவாலான சூழ்நிலை. ராமன்

ஒருவாரத்திற்கு தேவையான உணவு. மருந்து மற்றும் பொருள்கள் இருப்பு கொண்டான்.

பதியம் போட்டு வைத்திருந்த தக்காளி பனியில் சிரித்தது. வரலாறு காணாத பனிப்பொழிவு. மாகணம் முழுவதும் மின்வெட்டு. எதிர்பார்த்தது தான். ஒரு சில நிமடங்களில் வந்துவிடும். டெக்ஸாஸ்'ன் மின் துறை (ERCOT) முழுவீச்சில் பணியாற்றிகொண்டிருந்த்து. டிவிட்டர் அப்படித்தான் சொல்லியது.

*Child is the Father of Man* என்னும் தலைப்பிடப்பட்ட சுவர்ச்சித்திரத்தில் ஒரு தகப்பன் தன் பிள்ளையை அணைத்தபடி இருந்தான்

ஏற்கனவே வெப்பம் இருந்ததால் பெரிதாக ஒன்றும் அசவுகரியமில்லை.மூடிய சாளரம், கதவு வழி அறையினுள் பனிகாற்று பரவதொடங்கியது. மெத்தை மேல் பருத்தி உடுப்புகளிடையே ராஜூ உறங்கிக்கிடந்தான்.உண்மையில் பனியில் பூத்த புத்தம் புது ரோஜாமலர் போன்று இருந்தது அவன் புன்னகை.

விதியின் புன்னகை வேறு விதமாக இருந்தது.

# 5: புத்தம் புது காலை

Texasற்கு அமெரிக்கா என்றும் புகுந்தவீடுதான். மெக்சிகோ தான் தாய்வீடு. இன்னமும் பல வீடுகளின் முன் மெக்சிகோ கொடி தான் பறக்கும். Spanish தான் முதன்மை மொழி. ஆங்கிலம் அலுவல் மற்றும் ஒன்றிய தேவைக்கு. தாயிடம் இருந்து தனிதேசமாக பிரிந்து பின் அமெரிக்காவோடு இணைந்து Texas! நூற்றாண்டு கால கதை அது. ஆனாலும் இளம்தலைமுறை தன் தொடர்பை விட்டுவிடவில்லை. தனி சுதந்திர தேசமாக இருந்த அந்த நாட்களை அவள் ஒருபோதும் மறப்பதில்லை.விதியின் வஞ்சகம் அவளையும் விட்டுவைக்கவில்லை

மின்வெட்டு தொடரும் என்று அறிவிப்பு வந்தது. மாலை வந்துவிடும் என்று எதிர்பார்த்த மின்வெட்டு இரவும் தொடரும் என்றது எதிர்பார்க்காதது.வீட்டில் சமைக்க இயலாது. குளிர் வாட்டதொடங்கியது. இரவிற்குள் வந்துவிடும் என்று சுமிதாவிற்கு நம்பிக்கை கொடுத்தான்.

ராஜுவிற்கு குளிரில் நடுக்கம் வர தொடங்கியது. அருகில் படுத்துக்கொண்டு அணைத்துக்கொண்டாள். அம்மாவின் மார்புச்சூடு ராஜுவிற்கு கதகதப்பாக இருந்தது. சுமிதாவிற்கு இனம் புரியாத பயம் தோன்றி மறைந்தது. அவசரத்திற்கு மருத்துவ உதவி கிடைப்பதற்கு இது ஏதுவான நேரம் இல்லை.

இரவு முழுவதும் பனிப்பொழிவு தொடர்ந்தது. பாலை குடித்தபடியே உறங்கிவிட்டான் இராஜு. குளிரின் நிலைமை மோசமாகி கொண்டிருந்தது. காலை நிச்சயம் மின்வெட்டு சரியாகிவிடும் என்று அவனே அவனை சாமாதனபடுத்திக்கொண்டான்.



காலை எழுந்து பார்த்தால் கண்களை நம்பமுடியவில்லை. எங்கும் பனி. வீடு, சாலை, செடி கொடி எங்கெங்கும் பணி போர்த்தியிருந்தது.சுமிதாவிற்கு உள்ளம் துள்ளியது. அவ்வளவு பணி. நினைத்துபார்க்கவே இல்லை. அவள் பயம் தற்காலிகமாக குதுகலமாகி இருந்தது. இன்னமும் மின்வெட்டு தொடர்ந்தது. இராஜு முணங்கிக்கொண்டே இருந்தான்.

Texas மாகாணம் இன்னமும் சில துறைகளில் தன்னை தனி நாடாகவே கருதுகிறது. ஒட்டு மொத்த அமெரிக்காவுக்கும் இரண்டே மின்கட்டம் தான். Texas மட்டும் விதிவிலக்கு; கிழக்கு கட்டமும் இல்லாமல் மேற்கு கட்டமும் இல்லாமல், சிறப்பாக சொந்த மின்கட்டம்: ERCOT. மற்ற மாகாணங்களில் நிலைமை சீராகி வந்தாலும், இங்கு முன்னேற்றமில்லை. கூடி இருப்பது கோடி நன்மைதான் போல. தனித்திருப்பதன் பாதகத்தை எதிர்கொண்டது.

பகல் என்பதால் ராமன் கொஞ்சம் துணிவாக இருந்தான். எப்படியும் மாலைக்குள் நிலைமை சரியாகிவிடும். நண்பர்களும் சுமிதாவின் தோழிகளும் அலைபேசியில் ராஜு நலன் விசாரித்தனர்.

மாலை அறையின் விளக்குகள் ஒளிர்ந்தது. தொலைகாட்சி மாகாண நிலைமையை காட்டியது. கடந்த 60 வருடங்கள் இல்லாத பணி. படுக்கைஅறை வெப்பம் கூட்டப்பட்டது. இப்பொது பரவாயில்லை. இராமன் எழுந்து சென்று ஒரு தேநீர் தயார்செய்தான்.

பயம் முழுதும் அகன்றிருந்தது. இக்கட்டான சூழ்நிலையை கடந்துவிட்டதாக உள்ளுக்குள் மகிழ்ந்தான். அவனை கண்டு விதி சிரித்துகொண்டது.

# 6: Positive but Negative

மாதங்கள் ஓடோடி விட்டது. ராஜு இப்பொழுது தவழ்ந்து நடை பயில ஆரம்பித்துவிட்டான். அந்த குடியிருப்பு விளையாட்டு திடல் மாலை நாயகன் அவன் தான். தன் வயது ஒத்த பிள்ளைகளுடன் தத்திதத்தி ஒடி ஆடி விளையாடுவது தினசரி வாடிக்கை.

கீழே விமலாவும் அவள் தோழிகளும் கைப்பந்து விளையாடிக்கொண்டிருந்தனர். ராமனுக்கு தன் கல்லூரி நாட்கள் ஞாபகம் வந்து சென்றது.

சுமிதா-ராமன் வாழ்வு நன்றாக போனது; ராமன் தன் படுக்கை அறைக்கு இன்னொரு தொலைக்காட்சி வாங்கிவந்தான். NetFlixல் "Jane The Virgin" நான்கு தொடர்கள் முடித்திருந்தான்.

அரசாங்கம் இலவசமாக ஒவ்வொரு வீட்டிற்கும் நான்கு கொரொனா தொற்று சோதனை குச்சிகளை வழங்கியது. ராஜூக்கு தேவையில்லை. சுமிதா சோதனை இப்பொது வேண்டாமென்றாள். ராமன் ஒரு குச்சியை எடுத்து தன் மூக்கில் நுழைத்தான். குச்சியின் முனையை வெளியே எடுத்து திரவத்தில் கலந்து ஐந்து நிமிடம் காத்தான். முடிவு Negative. Positiveவாக உணர்ந்தான். சில சமயம் Negative is Positive.

இன்னும் இரண்டு நாளில் ராஜுக்கு வருடாந்திர மருத்துவ பரிசோதனை.விதி மீண்டும் ராமனை பார்த்து சிரித்தது. இது அவனுக்கான சோதனை.

தடுப்பூசி போடவேண்டும். மருத்துவனை அந்த பட்டியலை கோரும். பொட்டியில் தான் இருக்கும்.

அப்பொழுது ராஜுவின் அந்த மருத்துவ குறிப்பு ஒன்று கண்ணில் தென்பட்டது. ராஜுவின் இரத்தவகை: B+ve

இது சாத்தியமே இல்லை. சுமிதாவிற்கு O+வகை. தனக்கு A-வகை ; ஒன்று Oஆக இருக்கவேண்டும் அல்லது Aஆக இருக்கவேண்டும்

ராஜு B+வகை; அப்படி என்றால், ராஜு?

| Blood Type | Mother | | | |
|---|---|---|---|---|
| Father | A | B | AB | O |
| A | A or O | AB, A, B or O | AB or A or B | A or O |
| B | AB, A, B or O | B or O | AB or A or B | B or O |
| AB | AB or A or B | AB or A or B | AB or A or B | A or B |
| O | A or O | B or O | A or B | O |

NetFlixல் கதாநாயகி Jane மருத்துவமனையில் சண்டையிட்டு அழுதுகொண்டிருந்தாள். Janeவை அந்த நிலையில் பார்ப்பதற்கு பரிதாபமாக இருந்தது. ராமனையும் தான். "எத்தனை தோசை?" வேண்டும் என்றாள் சுமிதா, அடுக்களையில் இருந்த படியே.

சில சமயம் Positive is Negative! விதி மீண்டும் அழுத்தமாக சிரித்தது.

# 7: Blood is thicker than love

எங்கோ தவறு நடந்துள்ளது. சுமிதாவிடம் இப்பொழுது எதுவும் பேசமுடியாது. பிரச்சனையில் முடிந்துவிடும். திருநெல்வேலியில் இருக்கும் தன் மருத்துவ நண்பனிடம் இது பற்றி கேட்க வேண்டும். அதற்கு முன் Google ரத்த வகை Predictor தேடி ஆய்ந்தான்; சாதகமான பதில் இல்லை. ஓய்ந்தான். ஏமாற்றம். தனக்கு துரோகம் இழைக்கபட்டுள்ளதாக உணர்ந்தான்.

சரவணன் குழந்தைகள் மருத்துவர் அல்ல. சிறப்பு இதய நிபுணர். பள்ளி தோழன். மிகவும் நெருக்கமானவன். இந்த குழப்பத்திற்கு அவனால் ஒரு தீர்வு சொல்லமுடியும்.

அவனிடமிருந்தும் எதிர்மறை பதிலே வந்தது. அரிதிலும் அரிதிலும் அப்படி ஒரு வாய்ப்பு அமையும் என்றும் ஆனால் இந்த நிலையில் அப்படி இருக்காது என்றான். குழந்தைக்கு B+வாக இருக்க வாய்ப்பு மிக குறைவு என்றும் மீண்டும் ஒருமுறை பரிசோதனை எடுத்து பார்த்தால் A அல்லது O வாக தெரியவரலாம் என்றும் சொன்னான். சில சமயங்களில் மருத்துவமனை பணியாளர்கள் தவறுதலாக மாற்றிவிட நேரிடும் என்றும் அது இதுபோன்ற குழப்பத்திற்கு வழிவகுக்கும் என்றும் விளக்கினான். இந்த பதில் ராமனுக்கும் சிறிது ஆறுதல் அளித்தது.

சுமிதாவிடம் எதுவும் சொல்லவில்லை. குழந்தை ராஜு தன் மழலை மொழியில் அப்பா என்று அழைத்தான். இந்த முறை அவனுக்கு அந்நியமாக இருந்தது. குழப்பமும் பயமும் அவனை ஆட்கொண்டது. அப்படியே உறங்கிப்போனான். மறுநாள் காலையில் ராஜுவை

பரிசோதித்தார் Dr.சோபியா. ராஜு நல்ல ஆராக்கியமாக இருப்பதாகவும் , எடை, உயரம் நன்றாக உள்ளதாகவும் சொன்னார். இனி தாய்ப்பாலை குறைப்பதாக இருந்தால் படிப்படியாக குறைக்கலாம் என்று சுமிதாவிடம் கூறினார். மாமிசமும் காய்களும் சேர்க்க பரிந்துரைத்தார்.

அடுத்து வரும் செவிலியர் சிறிது இரத்த மாதிரி எடுப்பார் என்றும் , அது ஈய நச்சுக்கான வருடந்திர சோதனை தான் என்றும் விளக்கினார். "குழந்தையின் இரத்த வகை அந்த சோதனையில் தெரிய வருமா?" என்ற ராமனின் கேள்விக்கு ஒற்றை வார்த்தையில் ஆம் என்றார். சுமிதாவின் முகம் குழப்பத்தில் வாடியது.

டேவிட் தன்னை அறிமுகபடுத்திக்கொண்டே உள்ளே நுழைந்தார். தான் இரத்த மாதிரி எடுக்க வந்த செவிலியர் என்றும் ராஜுவுக்கு வலிக்காமல் எடுப்பதாக உறுதியளித்தார். பொம்மையையும் இனிப்புகளையும் காட்டியபடியே வலது கையில் ஊசி செலுத்தப்பட்டது. மூன்று சிறிய குப்பிகளில் மாதிரி சேமிக்கப்பட்டது. ராஜுவின் அழுகை அறை தாண்டியும் கேட்டது. டேவிட் சோதனை முடிவு நாளைக்குள் வரும் என்றார். மொபைலில் இருந்தே அறிந்துகொள்ளலாம் என்றும் கூறினார்.

இரவு தூக்கம் வரவில்லை. NetFlix ஓடவிட்டான். இந்த முறை கதாநாயகி Jane யிடம் ஒரு Dr. அழுது கெஞ்சிக்கொண்டிருந்தார். பக்கத்து அறையில் இருந்த வேறு ஒரு பெண்ணிற்கு செலுத்தவேண்டிய விந்தணுவை கதாநாயகிக்கு தவறுதலாக செலுத்துவிட்டதை ஒப்புக்கொண்டார். தவறு தன் மீது தான் என்றும், மிகப்பெரிய தவறு தான் என்றும், முழு பொறுப்பும் தானே என்றார்.

இது வெளியே தெரியவந்தால் தன் மருத்துவ எதிர்காலமே சிதைந்துவிடும் என்றும் Janeயிடம் மன்றாடினார். இதை தானே நிவர்த்திசெய்துவிடுவாதாக வாக்குஅளித்தார். Janeயிடம் தன்னை காப்பாற்ற Dr. அழுதுகொண்டிருந்தார். தன்னை காப்பாற்ற சொல்லி மருத்துவர் நோயாளியிடம் கெஞ்சியது வினோதமாயிருந்தது. தொலைக்காட்சியை அணைத்தான். ஆத்திரமும் எரிச்சலும் சேர்ந்து அவனை நிலைதடுமாற செய்தது.

விதி மீண்டும் சிரித்தது.

# 8: Back to Future - இன்று

இரவு உணவு பரிமாறிகொண்டிருந்தாள் சுமிதா. ராமனுக்கு எதுவும் ஒட்டவில்லை. என்னாதான் பிரச்சனை என்று கேட்டு விட்டாள் அவள். சமாளித்தான். முடியவில்லை. தனக்கு மிகவும் தலைவலி இருப்பதாகவும் தாங்கமுடியா வேதனை என்றும் நம்பவைத்தான். நாளை முடிந்தால் டாக்டரை பார்க்க உள்ளதாக சொன்னான். டிங்.. டிங்... மொபைல் சிணுங்கியது. ராஜுவின் அறிக்கை வந்துவிட்டது. சுமிதாதான் பார்த்தாள். இரத்தத்தில் ஈய நச்சு எதுவுமில்லை என்று வந்தது சுமிதாவிற்கு ஆறுதலாயிருந்தது. ராமனோ ரத்தவகையை அறிய விரைந்து வாங்கினான்.

மொபைலில் வந்த அந்த மருத்துவ அறிக்கை புயல் போல் நெஞ்சை சிதைத்து கொண்டிருக்கிறது. *Bபாசிட்டிவ்* என்ற அந்த வரி அவனை முற்றிலும் நெகட்டிவ் ஆக்கி விட்டது.

பிள்ளையின் எச்சில் வடியும் பாலை அவனால் ரசிக்கமுடியவில்லை. குழந்தை அப்படியே உறங்கிப்போனது. சுமிதாவும் கண் அயர்ந்துவிட்டாள்.

மறுநாள் காலை. பரிசோதனை மையம். Dr. பீட்டர் நன்கு அறிமுகமானவர். 'ஹலோ ராமன்' என்ற குரல் கேட்டு சுயநினைவு வந்தது ராமனுக்கு. Dr. பீட்டர் தான். மருத்துவமனை வரவேற்பு அறையிலேயே பழைய நினைவுகளில் மூழ்கிவிட்டான். 'ஹலோ Dr.!'. முன்பதிவு இல்லாமல் அவனை சந்திக்க நேரம் ஒதிக்கியதற்கு நன்றி தெரிவித்துக்கொண்டான்.

நிலைமையை தெளிவாக விளக்கினான், ராமன். அவனை பற்றிய கடந்த கால மருத்துவ குறிப்புகளை ஒருமுறை ஆய்ந்தார் பீட்டர். சுமிதாவின் இரத்தவகை O-ve ; எல்லாம் சரியாகவே உள்ளது. Mutation நடப்பதற்கு வாய்ப்பு மிகமிக குறைவு. தவறு நடந்ததற்கான சிறு தடயம் கூட இல்லை. ஆனால் ராஜுவின் ரத்த முடிவு ஒத்துப்போகவில்லை. எங்கோ தவறு உள்ளது. ஆனால் பிடிபடவில்லை.

Dr.மெர்லின் தனிப்பட்ட காரணத்தால் இந்த மருத்துவமனையில் இருந்து வெளியேறிவிட்டதாக தெரியவந்தது கண்டு துணுக்குற்றான். சிந்தித்து ஒரு முடிவுக்கு வந்தார். ஜெனிபரை எப்படியே பிடித்துவிட்டார். உள்ளே இருவரும் ஆலேசித்தார்கள். யாருடனோ தொலைபேசியில் பேசினார்கள். இராமனுக்கு சந்தேகம் இறுகியது. மருத்துவமனை தவறு இழைத்திருக்கிறது. நிச்சயம் விடக்கூடாது. சட்ட உதவி நாட வேண்டும்.

ஜெனிபரும் பீட்டரும் அவனை மரபியல் துறை சென்று ஆலோசிக்க அழைத்தனர். 13வது தளத்தில் இருந்தது மரபியல் துறை. Dr.கெவின் ராபர்ட் மனித மரபணு துறையில் நிபுணர். ஜெனிபர் நிலையை எடுத்துச்சொன்னார். கூடி விவாதித்தனர்.

இராமனுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அவன் மனைவியின் நிலை கேட்டதற்கு இது எதுவும் தன் மனைவிக்கு தெரியாது என்றும், இன்னும் தான் இங்கு வந்தது கூட அவளுக்கு தெரியாது என்றான்.

ராமனின் கண்களில் இருந்த சந்தோகத்தை Dr.கெவின் கவனிக்காமல் இல்லை. Dr.கெவின் முடிந்தளவு தெளிவுபடுத்த முயன்றார். ஒன்பதவது நிருவுருவில் (9th Chromosome) ஏதாவது Mutation ஏற்பட்டிருந்தால் இது போல் நிகழலாம் என்றார். நிருவுருவின் முழு ஆய்வும் படித்தால்

தான் ஒரு முடிவுக்கு வர இயலும் என்றார். இரத்த மாதிரி கொண்டு அவன் மரபணுவை வரிசைபடுத்தி ஆய்வு மேற்கொள்ள முடிவெடுத்துள்ளதாக தெரிவித்தனர். இதற்காகும் செலவை நிர்வாகம் ஏற்கும் என்று கெவின் கூறினார். இது போக *23AndMe* போன்ற பொது வணிக ஆய்வகங்களில் எச்சில் மாதிரி கொண்டு ராஜுவுக்கும் ராமனுக்கும் மரபணு சோதனை செய்து இரு வேறு முடிவுகளை ஆய்ந்தால் எல்லா கேள்விகளுக்கும் விடையளிக்குமென்று குழு நம்பியது. மருத்துவமனை தானே முன்வந்து ஆய்வது அவனுடைய சந்தேகத்தை வலுப்படுத்தியது. நேற்றிரவு பார்த்த Netflix தொடரில் இப்படித்தான் ஒரு டாக்டர் Janeயிடம் உரையாடியிருந்தார். மருத்துவமனையின் தவறு கதாநாயகியின் வாழ்வை முழுதுமாக புரட்டிபோட்டிருக்கும்.

எச்சில் மாதிரி சோதனை மருந்தக Over the counterல் கிடைக்கும் ; அவன் குடியிருப்பு அருகிலேயே ஒரு WalMart உள்ளது. அங்கு கிடைக்கும் அல்லது இணையத்தில் Order செய்யலாம். இரத்த மாதிரி நிச்சயம் மருத்துமனையில் தான் சோதனை செய்யப்படும்

குழந்தையின் அறிக்கையில் ராமனின் சொந்த மரபணுக்கள் இல்லையென்றால் அது மருத்துவமனையின் பிழையாகும். பெரும் சட்ட சிக்கலை எதிர்கொள்ள நேரிடும். முழுப்பொறுப்பும் இந்த துறையின் தலையில் விழும். ஜெனிபரின் கவலைக்கு காரணமிருந்தது. அவரும் மரபணு அறிக்கையை எதிர் நோக்கியிருந்தார்.

கணிப்பொறியில் Order கொடுத்தான். குப்பிகள் இரண்டு நாளில் அலுவலகம் வருமாறு பார்த்துக்கொண்டான்.

புதன் காலை. FedExன் குறுஞ்செய்தி தன் பட்டுவாடாவை உறுதி செய்தது. Manager எதற்கோ அழைப்பதாகவும் அலுவலகம் செல்வதாகவும் சுமிதாவிடம் பொய் சொன்னான். மதிய உணவைபற்றி கேட்டதற்கு வேண்டாம் என்று மறுத்துவிட்டான்.

9:30க்கு கடைசி பேருந்து. ஏறினால் 20 நிமிடம்; நகரின் நடுவில் இறங்கி விடலாம். பிரதான நிறுவனங்கள் இங்குதான் இருக்கும்.

மலைநில சாலையில் காரை செலுத்தினான். அந்த சாலை முழுதும் இந்திய கடைகள் நிரம்பியிருந்தன.சேலைக்கு தள்ளுபடி சொல்லிக்கொண்டிருந்தது ஒரு கடை. சிறு மலை கூட இல்லை. இதற்கு யார் HillCroft என்று பெயர் வைத்தார் என்ற நேரத்திற்கு தேவையில்லாத கேள்வி உதித்தது. சிக்னலில் நின்றது வாகனம்.இடது பக்கம் காந்தியின் படம். அடியில் *MAHATMA GANDHI District* என்று எழுதியிருந்தது! "சத்திய சோதனை" - அவன் காதுகளில் காந்தி கிசுகிசுப்பதாக இருந்தது.

விதி அவன் வருகைக்காக காத்துக்கொண்டிருந்தது!


MAHATMA GANDHI DISTRICT
ICC
Harwin DR 6600
MAHATMA GANDHI DISTRICT
ICC
Hillcroft AVE 5700

# 9: கள்ளமில்லா உள்ளம் - Houston

குப்பிகளை மட்டும் தனியே பிரித்து எடுத்தான். மாலை வீட்டில் தேநீர் நேரம். இது தான் சமயம். தொற்று சோதனை போல் சில செய்ய வேண்டுமென்றும் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் பங்கெடுக்க சொல்லவே Manager அழைத்தாகவும் சுமிதாவிடம் சொன்னான். அவள் முதலில் நம்பவில்லை. அரசாங்கம் கொடுத்தது போல் அலுவலமும் ஒரு சிறு சோதனை தான் என்றும் இராமன் சமாளித்தான்.

இரவல் புத்தகங்கள் சில பரவிக்கிடந்தன. ராஜு ஒரு அட்டைப்புத்தகத்தை சுவைத்துப்பார்த்தான். அவனுக்கு புத்தகங்களில் கதை கேட்பது பிடிக்கும். அதற்காவே சும்தா நூலகம் செல்வாள். நகரின் மையத்தில் அமைந்திருந்தது அந்த தலைமை நூலகம். சுமிதாவிற்கு பிடித்தான இடங்களுள் இதுவும் ஒன்று. Houston வந்த புதிதில் நிறைய தமிழ் நூல்கள் கண்டு மகிழ்ந்தாள். இலவச கணக்கு. ஐம்பது புத்தகங்கள் கொடுப்பார்கள். முன்பெல்லாம் நிறைய தமிழ் புத்தகங்கள் இருக்கும். 2017ல் வந்த பெரும்மழையில் நிறைய சேதமடைந்ததாகவும் , பலவற்றை நூலகமே தள்ளுபடி செய்ததாகவும், இரவல் சென்றவை பல திரும்பவில்லை என்றார்கள். வருத்தமாயிருந்தது. ஆனாலும் ராஜுவுக்கு நிறைய உண்டு அங்கு. பக்கத்துவீட்டு விமலா, படிக்கிறாளோ இல்லையே, ஒவ்வொரு சனியும் கட்டுக்கட்டாக அள்ளிச்செல்வாள். சில விளையாட்டுகளும் புத்தகங்களும் இரவல் எடுத்தால்,

குழந்தைகள் அருங்காட்சிகயகத்திற்கு இலவச அனுமதியும் உண்டு என்றாள்.



இப்பொழுது தான் தூங்கி எழுந்தான். சுமிதா தூக்கிவைத்துக்கொண்டாள். அம்மாவை பார்த்துக்கொண்டே பால் குடித்தான். அரை மணி நேரமாவது கழித்துத்தான் எச்சில் எடுக்கவேண்டும். பால் கலந்துவிட கூடும்! தேநீர் முடிந்திருந்தது. ராஜூவை துப்பச்சொன்னான். ராஜூ சிரித்தான். புன்னகைதான் தெறித்தது. சுமிதா Diaperஐ மாற்றினாள். கிச்சுகிச்சு மூட்டினாள். கொடுவாய் ஒழுக சிரித்தான். உதடுகளின் ஓரத்தில் எச்சில் ஒழுகியது. ஒரு வழியாய் தேவையான அளவு நிரப்பியாயிற்று.மூன்று குப்பிகளும்

தயாராகிவிட்டது. காலையில் USPSல் அனுப்பிவிட்டான். இன்னும் இரண்டு வாரங்கள் ஆகும்.

இனி மீண்டும் *Jane The Virgin* ஐ பார்ப்பதில்லை என முடிவெடுத்திருந்தான். இந்த முறை Netflix *Our Father* ஐ அவனுக்கு பரிந்துரைத்தது. இரண்டு தொடர்கள் போனது. Dr.டான் கிலின் 100 க்கும் மேற்பட்ட IVF சிகிச்சை கொள்ள வந்த பெண்களிடம் முறைகேட்டில் ஈடுபட்டதை பற்றிய உண்மை ஆவணப்படம்.


ராமனின் மூளையின் ஓரத்தில் சிறு பொறி தட்டியது. நிச்சயம் தவறு நடந்துள்ளது. தானும் மனைவியும் ஏமாற்றப்பட்டுள்ளோம்.

மனம் எங்கெங்கோ பறந்தது. மூளை தன்னையும் மீறி சிந்தித்தது. ராமனுக்குள் ஒரு போராட்டம் நடந்தது. சந்தேகம் என்னும் அரக்கனின் பலம் ஓங்க ஆரம்பித்தது.

# 10: கள்ளமில்லா சிரிப்பு - Memorial Hermann

இரண்டு வாரங்கள் இரண்டு யுகங்களாக போனது. யாருடனும் சரியாக பேசவில்லை. தூக்கமும் நிம்மதியும் தொலைந்து போயிருந்தது. மனம்விட்டு பேச ஆளின்றி தவித்தான். மூவருக்கும் தனித்தனியாக *23AndMe* யில் கணக்கு தொடங்கினான். ஏற்கனவே குறித்து வைத்துருந்த குப்பி எண்களை கணக்கில் இனைத்தான். காத்திருப்பு மிக கொடிது.

மருத்துவமனையில் இரத்த அறிக்கை தயாரகிவிட்டிருந்தது. Dr.கெவின் எதிர்ப்பார்த்தது அங்கு இல்லை. ஒன்பதாம் நிருவுரு சரியாகவே இருந்தது. அதில் ABO வகையை மாற்றும் தூண்டி எதுவுமில்லை. அப்படி அது நிச்சயம் என்றால் ராஜுவின் உடலில் இருப்பது இராமனின் மரபணுக்கள் இல்லை. அவனுக்கு தந்தை இல்லை.



கெவின் தன் கருத்தை 13வது தளத்தில் ஜெனிபரிடம் உறுதிப்படுத்தினார். Chicagoவில் தன் பழைய மருந்துவமனையில் ஒரு IVFல் கிண்ணங்கள் தவறுதலாக மாற்றப்பட்டிருந்தது பின்னாளில் தெரியவந்து பெரும்சிக்கல் விளைவித்த நிகழ்வை பகிர்ந்தார்.

ஜெனிபர் தன் உதவியாளரிடம் சுமிதாவிற்கு IVF நடந்த தேதியில் மேற்க்கொள்ளப்பட்ட மற்ற சிகிச்சைகளை பற்றி குறிப்புகள் கேட்டார். உதவியாளர் நிமிடத்தில் கணிப்பொறியில் அலசினார். அச்சுப்பொறி வெள்ளை தாளை உள்வாங்கி ஒரு பட்டியல் நீட்டியது.

மொத்தம் நான்கு சிகிச்சைகள். அதில் ஒன்று இலங்கையை பூர்விகமாக கொண்ட தீபா-அரவிந்தன் தம்பதி. ஜெனிபரின் இதயதுடிப்பு அதிகரித்தது. தீபாவின் சிகிச்சையை மேற் பார்வையிட்டார் ஜெனிபர். தீபாவின் பிரதான முதன்மை மருத்துவர் டாக்டர் மெர்லின். மெர்லினை விசாரிக்கலாம் என்றார். மெர்லின் மருத்துவமனையிலிருந்து விலகிவிட்டது பற்றி நினைவூட்டினார் பீட்டர்.

கண்ணுக்கு தெரியாத பிழை அறங்கேறியுள்ளது. ஜெனிபர் பல கேள்விகளுக்கு பதில் சொல்லவேண்டிய நேரம். நாளை இராமனை அழைத்துப்பேசலாம் என்றார்.மருத்துவனையில் இருந்து சுருக்கமாக ஒரு மின்னஞ்சல் இராமனுக்கு சென்றது; மரபணு நிருவுருக்களெல்லாம் சீராக இருப்பதாகவும் டாக்டரை தொடர்பு கொள்ளவும் சொல்லியிருந்தது.

சரவணன் WA onlineல் இருந்தான். அவனுக்கு மணி இரவு 11. பரவாயில்லை. இராமன் தன் நண்பனிடம் கேட்டான். சரவணன், "சாரிடா, நடந்தது எல்லாம் தப்பா இருக்கு" என்றான். அவனுடைய சந்தேகம் ஜெனிபரின் குழு மீது இருந்தது. முழு பூசணிக்காயை சோற்றில் மறைக்கபார்க்கிறார்கள். தான் சந்தேகித்தது சரிதான். மருத்துவமனையின் பெரும்பிழை. இதை இப்படியே விட்டுவிடக் கூடாது.

Dr.ஜெனிபரின் அலுவலகத்திற்கு அழைத்தான். அடுத்த மூன்று நாட்கள் சந்திக்கமுடியாதென்றும் , வெள்ளி மதியம் 2 மணிக்கு சந்திப்பு உறுதி செய்தார்கள். அதுவும் நல்லதுதான். அதற்குள் 23AndMe அறிக்கையும் கிடைத்துவிடும்.

ராஜு வாயில் எடுத்துக்கடித்தான். காரின் தொலைவிசை. கீங்...கீங் என கார் கத்தியது. காரை கத்தவிடுவது அவனுக்கு ஒரு விளையாட்டு. ஒருமுறை காரின் பின்புறத்தை விசையை யாரும் பார்க்கதநேரம் திறந்துவிட்டான். நல்லவேளை எதிர்வீட்டு பானு தான் சுமிதாவிடம் அதை சொன்னாள்.

ஐந்து ஆண்டுகள் காத்திருந்து தனக்கு கிடைத்த வரம் இவன்; இவனில்லாத வீடு எப்படி இருந்தது என நினைவுகளை கிளறிப்பார்த்தான். அழியாத

கோலங்களும் உடையாத பொம்மைகளும் கிறுக்காத சுவர்களும் சோகக் பல கதைகள் சொல்லும்.எப்படி ஆயினும் இராஜு தன் பிள்ளைதான்.

Netflix தொடர் விடாது அவன் மூளையின் மூலையில் பளிச்சிட்டது. தனக்கு தெரியாமல் தன் வயிற்றில் யாரோ ஒருவரின் கரு வளர்வது கண்டு Jane அழுதுகொண்டிருந்தாள். இரவு முழுதும் தேற்ற ஆளின்றி புலம்பினாள் அந்த கதாநாயகி.

அன்றொரு நாள் வரவேற்பறையில் கண்ட உயரமானவனின் முகம் உதிர்த்த சிரிப்பு இப்பொழுது அவன் காதுகளில் கேட்டது.

இதை விட கொடிய ஈட்டியாய் வேறெதுவும் தன் நெஞ்சில் பாய்வதற்கில்லை என நினைத்தான். நெஞ்சம் தீயென எரிந்து வெந்துகொண்டிருந்தது. கூர்வேல் ஒன்றை எடுத்து விஷம் கொஞ்சம் தடவிக்கொண்டிருந்தது, விதி. வெந்த புண் ஆறிவிடும் முன் எறியவேண்டும். விதி மெதுவாக தன் புன்னகையை தவழவிட்டது.

இருளில் மூழ்கியது உள்ளமும், உலகமும்.

# 11: நூலைப்போல் சேலை

சுமிதாவிற்கும் ராஜுவிற்கும் முதலில் முடிவுகள் வந்தன. ராஜுவின் கணக்கிற்குள் சென்றான். சுமிதாவிற்கு அழைப்பு விடுத்தான். மறுபுறம் சுமிதாவின் கணக்கில் நுழைந்து அழைப்பை ஏற்றான். அடுத்தாக மீண்டும் ராஜுவின் கணக்கில் சென்று *DNA சொந்தங்கள்* என்ற பெத்தனை சொடுக்கினான்.

இப்பொழுது சுமிதாவின் பெயர் முதலில் வந்தது. மிக நெருங்கிய சொந்தம் என்றும் 49.93% மரபணுக்கள் ஒத்துபோவதாகவும் அறிக்கையளித்தது. உறவு முறை *தாய்* என்று ஊகத்தை கணக்கிட்டது. `Shared DNA: 49.93% Predicted relationship: Mother`

அம்மா வழி Maternal Haplogroup N5 என்றும் அப்பா வழி Paternal Haplogroup வகை R-M512 என்ற அறிக்கை முடிவுகள் அவனுக்கு புரியவில்லை. இலங்கை , ஆஸ்திரேலியா, ஸ்காட்லாண்டு இன்னும் பல தேசத்தில் அம்மா வழி சொந்தங்கள் இருப்பதை கண்டு வியந்தான். நாளை அல்லது மறுநாள் இராமனின் முடிவுகளும் வந்துவிடும். எல்லா கேள்விகளுக்கும் விடை கிடைத்துவிடும்.

இரவின் நீளம் மிக நீண்டதாய் இருந்தது. தூக்கம் தொலைத்த இரவுகளில் இன்று முதன்மையானது. எப்பொழுது தூங்கினான் என்று தெரியவில்லை.

| Relationship | Average % DNA Shared | Range |
|---|---|---|
| Identical Twin | 100% | N/A |
| Parent / Child | 50% (but 47.5% for father-son relationships) | N/A |
| Full Sibling | 50% | 38% - 61% |
| Grandparent / Grandchild<br>Aunt / Uncle<br>Niece / Nephew<br>Half Sibling | 25% | 17% - 34% |
| 1st Cousin<br>Great-grandparent<br>Great-grandchild<br>Great-Uncle / Aunt<br>Great Nephew / Niece | 12.5% | 4% - 23% |
| 1st Cousin once removed<br>Half first cousin | 6.25% | 2% - 11.5% |
| 2nd Cousin | 3.13% | 2% - 6% |
| 2nd Cousin once removed<br>Half second cousin | 1.5% | 0.6% - 2.5% |
| 3rd Cousin | 0.78% | 0% - 2.2% |
| 4th Cousin | 0.20% | 0% - 0.8% |
| 5th Cousin to Distant Cousin | 0.05% | Variable |

காலை விடிந்தது. அவனை கேட்காமலே, மொபைலை விரல்கள் தடவி பார்த்தது. அந்த பயன்பாட்டை திறந்தான். அவனுடைய அறிக்கை வந்திருந்தது. அலுவலக கணணியை எடுத்து ராஜு கணக்கையும் தன்னுடையதையும் இணைத்தான். தன் பெயர் அதில்

இருக்காது என மூளை சொன்னாலும் , கேட்கும் நிலையில் மனம் இல்லை. தன் பெயர் வரும் என மனம் ஏங்கியது. சிலநேரங்களில் இப்படித்தான், மூளையும் மனமும் எதிர் நிலையில் நிற்கும். மூளை தெளிவாக சொன்னாலும் கேட்கும் நிலையில் மனம் இருப்பதில்லை.

இராஜூ கணக்கில் இருந்த *மரபணு சொந்தங்கள்* பெத்தனை சொடுக்கினான். இதயத்துடிப்பு ஏறியது. பட்டியலின் முதல் பெயர் ராமன். எதிர்பார்க்காதது! ஒருபுறம் வியப்பு; ஒருபுறம் மகிழ்ச்சி; மருத்துவமனை அனுப்பிய அறிக்கைக்கு எதிராக உள்ளது. அப்படியென்றால் மருத்துவமனை அறிக்கைதான் தவறாக இருக்கும். எல்லாம் சரிதான். ராஜு, தன் இரத்தம் தான்.

சிங்கப்பூர், மொரிசியஸ், கனடா, ஐரோப்பாவிலும் என இன்னும் சில சொந்தங்களை காட்டியது. உலகம் தான் எவ்வளவு சிறியது.

தன்னுடைய பேரை சொடுக்கி உள்ளே சென்றான். ராமனுக்கும் ராஜுவுக்கும் 25% க்கும் கீழ் மரபணுக்கள் ஒத்துபோவதாகவும் உறவுமுறையை அந்த செயலி ஊகித்திருந்தது. Father என்று எதிர்ப்பார்த்த இடத்தில் Uncle என்று இருந்தது.

மீண்டும் ஒருமுறை படித்தான்; Uncle/Nephew என்று தெளிவாக காட்டியது. மரபணுக்கள் வெறும் 24சதம் மட்டுமே பொருந்திபோவதாகவும் , குழந்தையின் தந்தைக்கு இராமன் சகோதரன் அல்லது ஒன்றுவிட்ட சகோதரனாக இருக்கவேண்டும் என்று அந்த சொல்லியது. You're not father , but possibly your brother!

வாய்ப்பே இல்லை.இப்படி வந்ததற்கு பதில் உறவே இல்லை என்று வந்திருக்கலாம். ஆனாலும் இது புது திருப்பம். அவனுடைய மரபணு பரவிக்கிடந்ததால் மருத்துவ நிர்வாகம் இது தன் பிழை இல்லை என கைவிரித்துவிடும். தவறு வேறு எங்கோ உள்ளது.

மழை பெய்ய ஆரம்பித்தது. வெளியே தூரத்தில் ஒரு இடி வானை இரண்டாக பிளந்தது. உள்ளே ராமன் கண்ட அறிக்கை அவன் நெஞ்சை இரண்டாக பிளந்தது. அவனுடைய அலைபேசி ஒலித்தது. சுமிதா எடுத்து Speakerல் போட்டாள். எதிர்முனையில் இரவி. ராஜுவை பார்க்க இந்த வார இறுதியில் சுகிர்த்தாவுடன் வருவாதாக கூறினான். சுமிதா இராமனை கேட்காமலே "சரிடா, சீக்கிரம் வா" என்றாள்!

மிக உற்சாகமாக இருந்தாள் சுமிதா! தனக்குள் இருந்த இரண்டு அசுரன்களும் மாறிமாறி வதம் செய்தனர். இராமனுக்கு நெஞ்சம் கிழிவது போல் இருந்தது. சந்தேகம் ஒரு கொடிய விஷம்.ராமனின் நெஞ்சம் வெந்தது. வெந்த புண்ணில் விஷம் கொஞ்சம் கொஞ்சமாக ஏறியது. மூளை தன் நிலையிழந்தது.

விதி தன் அகோரப்பற்களை விகாரமாக காட்டி கொக்கலித்து எக்களித்து சிரித்தது!

# 12: நான் அவன் இல்லை

வெள்ளி மதியம் அவன் விடுப்பு சொல்லிவிட்டான். Dr.ஜெனிபருக்கு இனி யாருக்கும் பதில் சொல்ல தேவையில்லை என்ற நிலை மகிழ்ச்சியை கொடுத்தது. ஆனாலும் ராமன் மேல் பரிதாபம் இருந்தது. கெவின் அவன் கொண்டு வந்த அறிக்கைகளை பார்வையிட்டார். மூல தகவலையும் அவர் கேட்டிருந்தார். இருபத்தைந்து எம்.பி அளவு இருந்தது. ஒன்பதரை லட்சத்திற்கும் அதிகமான வரிகள் அதில் இருந்தன. தானே அவர் அதை Genome ஒப்பிடு சாதனத்தில் உள்ளிட்டார். ராமனை சில நிமிடங்கள் பொறுமை காக்கவேண்டினார்.

ராமனால் கெவினை நேராக கண்ணெடுத்து பார்க்கமுடியவில்லை. முழுவதும் உடைந்திருந்தான். குழப்பம் அவனை கோபமடைய செய்திருந்தது. தான் ஏமாற்றப்பட்டது அவனால் ஏற்றுக்கொள்ளமுடியவில்லை.

அந்த கணணி இருவேறு பதிப்புகளையும் ஒப்பிட்டது. Dr.கெவின் சிரித்தார். 55% ஒத்துப்போவதாக கூறினார். அவனுக்கு புரியவில்லை. ராஜுவின் உண்மையான தந்தை இப்பொழுது கெவினுக்கு மட்டுமே தெரிந்த ரகசியம். ராஜுவின் பிறப்பில் எந்த குழப்பமும் இல்லை. ராமனின் பிறப்பில் தான் ஒரு அரிய நிகழ்வு நடந்ததை கண்டுபிடித்திருந்தார்.

"You both are chimera of each other" - Dr.கெவின் தீர்க்கமாக உரைத்தார். Chimera என்ற வார்த்தை அவனுக்கு விளங்கவில்லை. அன்று தான் முதன்முதலாக கேள்விப்படுகிறான்.



நீ ஒருவன் இல்லை. மரபணு ரீதியாக நீங்கள் இருவர். இரட்டைப்பிறப்பு. ஆனாலும் கருவிலேயே உங்கள் சகோதரனை நீங்கள் உறிஞ்சிக்கொண்டு விட்டீர்கள். மருத்துவம் இதனை Vanishing twin syndrome or Fusion chimerism என்று சொல்லும். இது அரிதிலும் அரிய நிகழ்வு என்றார். உண்மையில் ராஜு உங்கள் சகோதரனின் பிள்ளை என்று தெளிவுபடுத்தினார். உங்களின் இரத்தமும் எச்சிலும் வெறும் 55 சதம் மட்டுமே

பொருந்திபோகிறது. சாதரணமாக இது 100 சதம் பொருந்தும். அதனால் தான் இப்படி ஒரு குழப்பம் என்றார்.

கரு வளர்ந்து நோயெதிர்ப்பு ஆற்றல் பெறும் முன் இந்த சேர்க்கை உண்டாகியதால் இருவேறு மரபணுக்களையும் வளரும் உயிர் தானதாகவே ஏற்றுக்கொண்டது.

தன் சகோதரன் பிறக்கவில்லை, ஆனாலும் ஒரு பிள்ளையை வாரிசாக கொண்டுவிட்டான். இல்லாதவன். ஆனாலும் பொல்லாதவன்.

அவிழ்க்கமுடியாத மர்மங்கள் பலவற்றை தன்னுள் முடிச்சுக்களாக பொதித்துக்கொண்டு அந்த மரபணு கோடி கோடி வருடங்கள் தொடர்கிறது. அதன் சங்கிலி அவ்வளவு எளிதில் அறுபடுவதில்லை. இன்னும் கோடி வருடங்கள் அது தொடரட்டும்.

விதி ஒரு மெல்லிய புன்னகையுடன் சிரித்தது. அதன் சிரிப்பில் அரிதான ஒரு புதிர்க்கு விடை கிடைத்துவிட்டது.

# 13: அன்பு சூழ் உலகு

தேநீர் நேரம். படுக்கையறை தாண்டி வருகையில் எதிரில் இருந்த கண்ணாடி துடைக்கப்பட்டு பளபளப்பாய் இருந்தது. ஒரு பிம்பம் பளிச்சிட்டது. முதன் முதலாக தன் சகோதரனை பார்த்தான், இராமன். இருவரும் சிரித்துக்கொண்டனர்.

இது நாள் வரை தன் கதை சுமிதாவிற்கு தெரியாது. இனிமேலும் சொல்லி அவளை குழப்பபோவதில்லை. விமலாவின் மகள் சிறு சைக்கிள் ஓட்டி பழகிக்கொண்டிருந்தாள். ராமன் அவளின் பிறந்தநாளுக்கு பரிசளித்துருந்தான். ராஜுவின் நண்பர்கள் கீழே காத்திருந்தார்கள்.

*குழந்தைகள் நம் மூலமாக இவ்வுலகிற்கு வருகிறார்கள். நமக்காக அல்ல*. நாம் இவ்வுலகை அவர்களுக்கு பரிசளிக்கத்தேவையில்லை. உண்மையில் நாம்தான் அவர்களிடம் இந்த உலகத்தை கடன்பட்டிருக்கிறோம். அதை பத்திரமாக அவர்களிடம் சேர்க்க வேண்டிய பெரும் பொறுப்பு நம்மை சார்ந்தது.

அன்பு சூழ் உலகு இது. யாதும் ஊரே; யாவரும் கேளிர்;

**முற்றும் .**

---


இல்லாதவன் பிள்ளை!
"பிள்ளைப்பேறு தள்ளி போன தம்பதியின் மருத்துவ சிகிச்சையில்
ஏற்பட்ட குழப்பம். அதற்கு மரபணுக்கள் கொடுத்த விடை"